## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 1 |
| Name | : திரு. கணேசன் |
| Father Name | : திரு. பொன்னுசாமிகவுண்டர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் சத்தியமங்கலம் தாலுக்கா, விண்ணம்பள்ளி வாலிபாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். நான் விண்ணப்பள்ளி பஞ்சாயத்து தலைவராக சம்பவ சமயத்தில் இருந்தேன். 01-02-2021 அன்று விண்ணப்பள்ளி பஞ்சாயத்து அலுவலகம் முன்பாக ஏதோ தகராறு நடந்துகொண்டிருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்க்க, அல்லிமுத்து ஒரு பையனை அடித்துவிட்டதாகவும், அடிபட்ட பையன்

சமூதாய கூடத்தில் படுத்திருந்ததாகவும் சொன்னார்கள். அங்கு சென்று பார்க்க அந்த பையனுக்கு தலையில் ரத்தம் வந்துகொண்டிருந்தது. மேற்படி சம்பவம் குறித்து நான் காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். போலீசார் அங்கு வந்து பார்த்தனர். அப்போது அந்த பையன் இறந்துகிடந்தான். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் நான் கொடுத்தது. புகார் அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணைசெய்ய அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01-02-2021 அன்று மாலை 6 மணி அளவில் நானும், பெரியசாத்தனூரை சேர்ந்த சுப்புநாயக்கர், புதுவலவு தோட்டத்தை சேர்ந்த வேலுச்சாமி ஆகியோர் சமுதாய கூடம் பக்கம் அல்லி முத்து வீட்டின் அருகே சமுதாய கூடத்திற்கு வெள்ளை அடித்து பராமரிப்பது பற்றி பேசிக்கொண்டிருந்த சமயம் மகேந்திரன், வசந்தி வீட்டின் முன்பு வந்து நின்று வசந்தியை கூப்பிட்டதாகவும், அவர் வீட்டிலிருந்து வெளியே வருவதற்குள் எதிரி மகேந்திரனை பார்த்து இங்கு வரக்கூடாது என்று எச்சரித்த சமயத்தில் இருவருக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது எதிரி, மகேந்திரனின் கன்னத்தில் மாறி மாறி அறைந்ததாகவும், அப்போது மகேந்திரன் வாசலின் கீழே விழுந்த சமயம் எதிரி அவரது காலால் நெஞ்சில் ஓங்கி உதைத்ததாகவும், இதை பார்த்த நாங்கள் அங்கு சத்தம் போட்டு சென்ற சமயத்தில் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், அப்போது மகேந்திரனை நாங்கள் பார்த்த சமயம் அவருக்கு இடது முன் நெற்றி , வலது கன்னம், இடது கன்னம், மற்றும் இடது அல்லை

ஆகிய இடங்களில் கன்றிய காயம் இருநத்தாகவும், அவருக்கு தண்ணீர் கொடுத்து ஆம்புலன்ஸ்-ஐ வரவழைத்து மருத்துதுவமனைக்கு அனுப்பிவைத்தாகவும், சிறிது தூரம் அவர் நடந்துசென்ற சமயம் தடுமாறிய படி கீழே படுத்துவிட்டதாகவும், அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு சம்பவ இடத்திலோயே இறந்துவிட்டதாகவும், இது குறித்து நான் காவல்நிலையத்தல் புகார் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 2 |
| Name | : திரு. வேலுச்சாமி |
| Father Name | : திரு. பெரியதிம்மநாயக்கர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 65 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் விண்ணப்பள்ளி, புதுவலவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இறந்துபோன மகேந்திரனை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. 2021, 02 வது மாதத்தில் ஒருநாள் விண்ணப்பள்ளிக்கு வந்தேன். அப்போது கறிக்கடை அருகே பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள். அங்கு யாரோ ஒருவர் ஒரு நபரை அடித்துக்கொன்றுவிட்டதாக பேசிக்கொண்டார்கள். நான் அங்கு சென்று பார்த்தேன். எதிரி தான் அந்த நபரை அடி்துதுக்கொன்றதாக

பேசிக்கொண்டார்கள். வேறு விபரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணைசெய்ய அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01-02-2021 அன்று மாலை 6 மணி அளவில் நானும், பெரியசாத்தனூரை சேர்ந்த சுப்புநாயக்கர், அ.சா.1 ஆகியோர் சமுதாய கூடம் பக்கம் அல்லி முத்து வீட்டின் அருகே சமுதாய கூடத்திற்கு வெள்ளை அடித்து பராமரிப்பது பற்றி பேசிக்கொண்டிருந்த சமயம் மகேந்திரன், வசந்தி வீட்டின் முன்பு வந்து நின்று வசந்தியை கூப்பிட்டதாகவும், அவர் வீட்டிலிருந்து வெளியே வருவதற்குள் எதிரி மகேந்திரனை பார்த்து இங்கு வரக்கூடாது என்று எச்சரித்த சமயத்தில் இருவருக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது எதிரி, மகேந்திரனின் கன்னத்தில் மாறி மாறி அறைந்ததாகவும், அப்போது மகேந்திரன் வாசலின் கீழே விழுந்த சமயம் எதிரி அவரது காலால் நெஞ்சில் ஓங்கி உதைத்ததாகவும், இதை பார்த்த நாங்கள் அங்கு சத்தம் போட்டு சென்ற சமயத்தில் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், அப்போது மகேந்திரனை நாங்கள் பார்த்த சமயம் அவருக்கு இடது முன் நெற்றி , வலது கன்னம், இடது கன்னம், மற்றும் இடது அல்லை ஆகிய இடங்களில் கன்றிய காயம் இருநத்தாகவும், அவருக்கு தண்ணீர் கொடுத்து ஆம்புலன்ஸ்-ஐ வரவழைத்து மருத்துதுவமனைக்கு அனுப்பிவைத்தாகவும், சிறிது தூரம் அவர் நடந்துசென்ற சமயம் தடுமாறிய படி கீழே படுத்துவிட்டதாகவும், அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு சம்பவ

இடத்திலோயே இறந்துவிட்டதாகவும், இது குறித்து நான் காவல்நிலையத்தல் புகார் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 3 |
| Name | : திருமதி. வசந்தி |
| Husband Name | : திரு. சின்னசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் விண்ணம்பள்ளியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இறந்துபோன மகேந்திரன் எனது மகன். நான் மில்லுக்கு வேலைக்கு போய்கொண்டிருந்தேன். அல்லிமுத்துவுக்கும், என் மகனுக்கும் சண்டை ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சம்பவ இடத்திறகு வந்து பார்த்த சமயம் அங்கு யாரும் இருக்கவில்லை. சம்பவத்தை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணைசெய்ய அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01-02-2021 அன்று மாலை 6 மணி அளவில் நான் எனது வீட்டிற்கு முன்பாக நின்றுகொண்டிருந்தபோது மகேந்திரன் என்னை கூப்பிட்டதாகவும், நான் வீட்டிலிருந்து வெளியே வருவதற்குள் எதிரி மகேந்திரனை பார்த்து இங்கு வரக்கூடாது என்று எச்சரித்த சமயத்தில் இருவருக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது எதிரி, மகேந்திரனின் கன்னத்தில் மாறி மாறி அறைந்ததாகவும், அப்போது மகேந்திரன் வாசலின் கீழே விழுந்த சமயம் எதிரி அவரது காலால் நெஞ்சில் ஓங்கி உதைத்ததாகவும், இதை பார்த்த நாங்கள் அங்கு சத்தம் போட்டு சென்ற சமயத்தில் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், அப்போது மகேந்திரனை நான் பார்த்த சமயம் அவருக்கு இடது முன் நெற்றி, வலது கன்னம், இடது கன்னம், மற்றும் இடது அல்லை ஆகிய இடங்களில் கன்றிய காயம் இருநத்தாகவும், அவருக்கு தண்ணீர் கொடுத்து ஆம்புலன்ஸ்-ஐ வரவழைத்து மரு்துதுவமனைக்கு அனுப்பிவைத்தாகவும், சிறிது தூரம் அவர் நடந்துசென்ற சமயம் தடுமாறிய படி கீழே படுத்துவிட்டதாகவும், அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு சம்பவ இடத்திலோயே இறந்துவிட்டதாகவும், இது குறித்து நான் காவல்நிலையத்தல் புகார்

கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**